**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.190/2019**

பெயர் : திருமூர்த்தி (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி தரப்பில் எங்கள் ஊரில் கியாஸ் லைன் பைப் பதித்தார்கள் அதில் எனக்கு பணம் தரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்தேன்.

2. மற்றவர்களுக்கு கொடுத்தபோது எனக்கு ஏன் கொடுக்கவில்லை, என்று கேட்டதற்கு அரசு சொத்து ஆகிவிட்டதால் பணம் கொடுக்கவில்லை என்று காரணம் கூறினார்கள். தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. எனது பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

3. தாவா சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது பெற்றோர் விவசாயம் செய்து வந்து அதன் பின்னர் நான் 1993ம் ஆண்டு முதல் விவசாயம் செய்து வருகிறேன்.

4. 1ம் பிரதிவாதி நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகள் பணம் வழங்கும் போது அருகில் உள்ள நிலங்களில் உரிமையாளர்களின் பட்டாவை பார்வையிட்டு அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணம் வழங்கினார்கள் என்றால் சரிதான்.

5. தாவா சொத்துக்கள் அரசு புறம்போக்கு நிலம் என்பதாலும், தாவா

சொத்துக்களுக்கு எனது பெயரில் பட்டா ஏற்படவில்லை என்பதாலும் எனக்கு பணம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

6. கடந்த 2022ம் ஆண்டு தாவா சொத்தில் பைப் லைன் போடப்பட்டு அது சம்மந்தமாக அனைத்து நடவடிக்கைகளும் முடிக்கப்பட்டு தோண்டப்பட்ட குழிகள் மூடப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

7. தாவா சொத்துக்களில் 1ம் பிரதிவாதி பைப்லைன் பதிக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்த மனு எண்.37/2019 மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. பெட்ரோலியம் பைப்லைன் சட்டம் பிரிவு 14ன் படி நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்ய மேற்படி சட்டப்பிரிவில் தடை உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

9. எனது பெயரில் பட்டா ஏற்படவில்லை என்பதால் 1ம் பிரதிவாதி எதிராக எந்த பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)